


# EXPRESS VELACHERY

Neighbourhood Newspaper - Weekly

*Free Circulation*




VOL - 4 ISSUE - 21 Editorial : 044-42077328 / 7305837388

## RALLY ON SPORT AWARENESS...




Magic Bus India Foundation- Mondelez Sports for Girls program in association with Cadbury Dairy Milk organized a Rally on sports awareness on 09/11/2022 at St. Antony's Higher Secondary School, children prepared the placards containing message on sports, its benefits and sports awareness. Guest of the program was Mr. Balakrishnan, Secretary Tansi nagar welfare association he motivated children towards participating in sports and choosing sports as career choice also appreciated the Magic Bus for training children to excel in sports. Rally was inaugurated by Mr. Balakrishnan, Secretary Tansi nagar welfare association Sr. S. Maria Jothi, Head Mistress, St. Antony's Higher Secondary School, Mr. Srinivasan, Senior Manager Program (TN) - Magic Bus India Foundation. Totally 60 children took part in the Rally and spread awareness messages with the help of Project Manager and coaches of Magic Bus. Children walked around the Tansi Nagar streets near by the school.









On 9th November , an felicitation ceremony was conducted by Rotary club of Chennai Velachery at Govt Higher Secondary School -Velachery.From this school ,Four students G.Reethika, K.Abhinaya shree, T.Mugiya and K.Isha Devi have successfully passed NEET and 3 of them got MBBS admission in Govt Medical Colleges and One is on the waiting list for Dental college . Rotary club of Velacherymembers appreciated and felicitated these students with cash prizes and awards.Rotary members thanked head mistress and all the teachers for their excellent involvement for moulding the students to make them achieve their dreams.In this program these students thanked all and shared their experience with all other students of the school and inspired them.









# CLASSIFIED


**Commercial Space for Rent**

600 Square feet for 15,000/-@ ground floor
*31/14, Sarathy Nagar, 2nd street, Velachery ( Bethel Hr Sec School Opp )*
3 month rent as advance

CONTACT
8015427018

---

**WANTED**

Front Desk Executive
*(Male / Female)*
Ateliers Fitness
Velachery, Behind A2b

*Contact*
**9841030772**

---

**TMS YOGA AND ART'S CENTER**

SIMPLE SOLUTION TO LEARN
ONLINE & OFFLINE

*Contact*
9789098094
8012041624
9500090445

Velachery, Madippakkam, Keelkatalai.

---

**DESIGNING**

Tamil & English DTP designing works
Rs. 750/- only

*Contact*
**7305837388**

---

**Commercial Space for Rent**

850 Square feet for 27,000/- @ ground floor
*Diya Complex, Vijayanagar Main Road, Velachery (Near Ananda Bhavan)*
2 L as advance

CONTACT
7305837388

---

To Advertise about Your Business
Rental House, Buying, Selling, Services & Job Vacancy Pay
Rs. 100/- Only

---

**Mother Land**

*Play School, Day Care & After School Care*
*No.38, 2nd Street, Tansi Nagar, Vijayanagar, (Near ICICI Bank - Royal Shoppee) Velachery, Chennai - 600 042.*

*Contact*
**72992 62185**
**90947 52300**

---

**WANTED**

*Tele Callers*

CONTACT
**7305837388**


---

Prevention Tips For COVID-19




---


**WOMAN'S WELLNESS YOGA CENTRE**
**Contact : 9444 122 922**

**TREATMENTS FOR**

- Headache / Migraine
  தலைவலி / ஒற்றை தலைவலி
- Sinusitis
  சைனஸ் தொந்தரவு
- Neck Pain / Cervical Spondylosis
  கழுத்து வலி
- Back Pain / Lumber Spondylosis
  முதுகு வலி
- Digestion Problems & GIT disorders
  வயிறு ரூ குடல் சம்பந்தமான தொந்தரவுகள்
- Uterine ailment like Fibroid
  கர்ப்பப்பை கோளாறுகள்
- PCOD
  மாதவிடாய் கோளாறுகள்
- Respiratory ailments, Asthama
  சுவாச கோளாறுகள்
- Diabetes & is Complications
  சர்க்கரை வியாதிகள்
- Cholastrol, BP
  கொலஸ்ட்ரால்இ ரத்த கொதிப்பு
- Thyroid Problems
  தைராய்டு பிரச்சனை
- Stress, Anxiety & Sleep Disturbance
  மன அழுத்தம் ரூ தூக்கமின்மை
- Weight Loss & Weight gain
  உடல் எடையை குறைக்க ரூ அதிகரிக்க
- General Health
  பொது மருத்துவம்
- Infertility
  குழந்தையின்மை

---

CONSULTANT CATERING HOSPITALITY SERVICE

**NFC**
NIMS FOOD CONSULTANT

E. KAMESH KUMAR IHM-MBA

Office:plot No:4,kumaran nagar, keelkattalai, chennai-600117
Adviser:K.VIJAYA KANCHANA
MSC Food & Nutrition.

email:Nutritionnfc@gmc
**Mobile:9790 902400**
email:Consultantnfc@gmail.com


---

## சென்னையில் பெட்ரோல், டீசல் விலை நிலவரம்

Friday Price



| பெட்ரோல் விலை | டீசல் விலை |
|---|---|
| விலை 1 லிட்டர் | விலை 1 லிட்டர் |
| 102.63 | ₹ 94.24 |

---


NISHA YOGA & MEDITATION CENTRE VELACHERY

**Online Class for Women and Kids**

*FOR ALL AGE CATEGORIES*

*CONTACT*
**89391 53560**

---

**DESIGNING**

Tamil & English DTP designing works
Rs. 500/- only

*Contact*
**7358182075**

---

**WANTED**

**LADIES TAILOR**

**PRASUDRA Boutique**

No:2 LAKSHMI NAGAR, 2nd STREET, VELACHERY

*CONTACT - PREMALATHA*
**4435504719**
**8870393999**


---

## சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்

| | | | | |
|---|---|---|---|---|
| தங்கம் விலை - | 22 கேரட் | | 24 கேரட் | |
| | 1 கிராம் | 4905 | 1 கிராம் | 5307 |
| | 8 கிராம் | 39240 | 8 கிராம் | 42456 |
| வெள்ளி விலை - | 1 கிராம் | 67.80 | | |
| | 1 கிலோ | 67800 | | |

Friday Price

---


**TUITION CENTRE @ Velachery**

**Baby Nagar**

*For Students Till 9th Grade of Any Syllabus*

*Contact*
**909 494 7285**

---

**Butter Flies**

Beauty Parlour & Beauty Training Institute
Recognised by Tamilnadu Governmen

**Ladies & Kids Only**
Consultant: Beauty tip & women empowerment (adviser)

No:1, MG NAGAR, ATHANUR - 603 202
binduinno@gmail.com

**80560 87391**
**81247 02731**

---

SHARAN TRAVELS

All kinds of Tourist vehicle available here
Drivers Available

Contact V. Marimuthu
**9840508030**

---

**RENTAL**

LAND BUYING, SELLING

All Kind of Building Repair Works Undertaken

Contact B. Rajendran
**90809 94500**

---

**SERVICES**

Plumbing works

Contact
Govindaswamy

87544 09752

ஆன்மீக தகவல்

# கார்த்திகை மாத சிறப்புகள்

கார்த்திகை மாதம் கருமையான மேகங்களைக் கொண்டு அதிகளவு மழைபொழியும் கார் காலம் ஆகும். காந்தள் பூக்கள் அதிகம் மலரும் மாதம். ஆதலால் இம்மாதம் கார்த்திகை எனப் பெயர் பெற்றது. கார்த்திகை மாதத்தில் நாள்தோறும் சூரிய உதயத்தின் போது நீராடுபவர்கள், சகல புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடிய புண்ணிய பலனை அடைவார்கள். கார்த்திகை மாத முதல் நாளில் முடவன் முழுக்கு என்று குறிப்பிட்டிருப்பார்கள். இந்த நாளில் காவேரியில் நீராடினால் ஐப்பசி மாதத்தில் நீராடும் துலா ஸ்நானப் பலனை இந்த ஒரே நாளில் பெற முடியும் என்பது ஐதீகம். பல்வேறு சிறப்புகளைக் கொண்ட கார்த்திகை மாத சிறப்புகளைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

கார்த்திகை மாதத்தின் முப்பது நாட்களிலும், அதிகாலையில் நீராடி, சிவ- விஷ்ணு பூஜைகள் மற்றும் தீப தானம் செய்து, வீட்டின் எல்லா இடங்களிலும் தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்து வழிபட்டால், குறைவற்ற மகிழ்ச்சி உண்டாகும் என்று புராணங்கள் விளக்குகின்றன. கார்த்திகை மாதத்தில் விளக்கு தானம் செய்பவர்கள் பிரம்ம ஹத்தி முதலான தோஷங்களிலிருந்தும் விடுபடுவார்கள். வெண்கலம் அல்லது வெள்ளி விளக்கில் நெய்யிட்டு,தீப ஒளியுடன் வேதம் அறிந்த விற்பன்னருக்கு தானம் அளித்தால், இல்லத்தில் தடைப்பட்ட சுப காரியங்கள் மகிழ்வுடன் நிறைவேறும். விருச்சிக ராசியில் சூரியன் சஞ்சரிக்கும் இம்மாதத்தில் மனசேர்க்கை, உடல் சேர்க்கை, கர்ப்பதானம் ஆகிய இவற்றில் பிரச்சினைகள் வராது. எனவே, கார்த்திகை மாதத்தைத் திருமண மாதம் என்று இந்து சாஸ்திரம் கூறுகிறது. கார்த்திகை மாதத்தில் சிவலிங்கத்தை நெய்யினால் அபிஷேகம் செய்து வில்வம் மற்றும் மரிக்கொழுந்தால் அர்ச்சனை செய்து வழிபட்டால் குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். கார்த்திகை மாதத்தில் கார்த்திகை தீபம், சோமவார விரதம், உமாமகேஸ்வர விரதம், கார்த்திகை ஞாயிறு விரதம், கார்த்திகை விரதம், விநாயகர் சஷ்டி விரதம், கார்த்திகை மாத வளர்பிறை துவாதசி, ப்ரமோதினி ஏகாதசி, ரமா ஏகாதசி போன்ற வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கார்த்திகை மாதத்தில் மெய்ப்பொருள் நாயனார், ஆனாய நாயனார், மூர்க்க நாயனார், சிறப்புலி நாயனார், கணம்புல்ல நாயனார் ஆகிய நாயன்மார்களின் குருபூஜை நடைபெறுகிறது.

கார்த்திகை பவுர்ணமி விரதம்

கார்த்திகையில் நம்முடைய உடல் மற்றும் உள்ளத்தின் இயக்கம் சீராக இருக்கும். எனவே இம்மாதத்தின் முதல் நாள் அன்று தர்ம சாஸ்தாவாகிய ஐயப்பனுக்கு மாலை அணிந்து விரதம் மேற்கொள்ளப்படுகிறது. கார்த்திகை மாதப் பவுர்ணமியில் சந்திரன் ரிஷபராசியில் முழுமையாக இருப்பதால் ஆறுகள், ஏரிகள், குளங்களில் உள்ள நீர் தெய்வீக ஆற்றல் பெறுகிறது. அப்போது செய்யும் ஸ்நானம் எல்லாத் தீமைகளையும் பாவங்களையும் அழித்துவிடும். கார்த்திகை திருநாளன்று நெல் பொரியை நைவேத்தியமாக படைத்தால் சிவனருள் கிடைக்கும்.

கார்த்திகை விரதம்

கார்த்திகை மாதத்தில் மது, மாமிசம் முதலானவைகளை ஒழித்து விரதம் அனுஷ்டிப்பவர் சகல பாவங்களிலிருந்தும் விடுபட்டு விஷ்ணு பாதத்தை அடைவார்கள். கார்த்திகை மாதத்தில் மாமிச ஆகாரத்தைக் கைவிடாதவர்கள் புழுப் பூச்சிகளாய் பிறவி எடுப்பார்கள் என்று பத்மபுராணம் கூறுகிறது. கார்த்திகை, திருவோணம் ஆகிய இரு நட்சத்திரங்களும் நல்ல நட்சத்திர சக்தி தருவதால் இந்த நட்சத்திரம் வரும் நாட்களில் விரதங்கள் இருக்க வேண்டும்.

நவகிரக தோஷங்கள் நீங்கும்

கார்த்திகை ஞாயிறு மிகவும் போற்றப்படுகிறது. இதனால் யமபயம் நீங்கும். நவக்கிரக மூர்த்திகள் விரதம் அனுஷ்டித்து, வரம் பெற்ற கார்த்திகை ஞாயிறு விரதத்தை, முதல் ஞாயிறு தொடங்கி பன்னிரண்டு வாரங்கள் கடைப்பிடித்தால், நவக்கிரகங்களால் ஏற்படும் தோஷங்கள் நீங்கி, சிவசக்தியின் பேரருள் கிடைக்கும்.

பிரம்மஹத்தி தோஷம் நீங்கும்

ஆண்டுதோறும் கார்த்திகை மாத ஞாயிற்றுக் கிழமைகளில், அதிகாலை 5 முதல் 6 மணிக்குள் சிவபெருமானும் பார்வதிதேவியும் அஸ்திர தேவரோடு பிரகார வலம் வந்து, குப்த கங்கையின் கிழக்குக் கரையில் ஆசி வழங்கி அருளுகின்றனர். கார்த்திகை மாதத்தின் ஞாயிற்றுக் கிழமைகளில் இந்த குப்த கங்கையில் நீராடினால் பிரம்மஹத்தி தோஷங்கள் உண்ட பாவம், திருடுவதால் வரும் பாவம் மற்றும் மனச் சஞ்சலத்தால் ஏற்பட்ட பாவங்கள் ஆகியவை நீங்கி விடும் என்று பிரும்மாண்ட புராணம் கூறுகிறது.

சோமவார விரதம்

கார்த்திகை மாத திங்கட்கிழமையில் திருக்குற்றாலத்தில் நீராடி, குற்றால நாதரையும், அன்னை குழல்வாய்மொழி அம்மையையும் வழிபாடு செய்தால் பாவங்கள் அழியும். கார்த்திகையில் சோமாவார விரதம் இருப்பது பாவங்களை விரட்டும். கார்த்திகை மாதம் காவேரியில் நீராடுவது, தீபம் தானம் செய்வது, வெங்கல பாத்திரம், தானியம், பழம் தானம் செய்தால் செல்வம் சேரும்

குழந்தை பாக்கியம்

முருகப் பெருமானுக்கு இரண்டு நட்சத்திரங்கள் உகந்தவையாகும். ஒன்று விசாக நட்சத்திரமும், மற்றொன்று கார்த்திகை நட்சத்திரமும்தான். ஐவகாசி மாதம் விசாக நட்சத்திரத்தன்று பிறந்தவர் ஆகையால் விசாக நட்சத்திரம் முரகக் கடவுளுக்குரியதாயிற்று. சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தீப்பொறிகளாகத் தோன்றி சரவணப் பொய்கையில் குழந்தையாய் தவழ்ந்த முருகனை கார்த்திகைப் பெண்கள் எடுத்து வளர்த்ததால் கார்த்திகையும் முருகனுக்குரிய நட்சத்திரமாயிற்று. கார்த்திகைகளில் முருகப் பெருமானுக்கு சந்தனம் அபிஷேகம் செய்து வழிபட்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

பவுர்ணமி கிரிவலம்

திருவண்ணாமலையை கார்த்திகைப் பவுர்ணமி அன்று தேவர்களும், ரிஷிகளும், முனிவர்களும் வலம் வந்திருக்கிறார்கள். இந்திரன், வருணன், வாயு, குபேரன், யமன் ஆகியோரும் வலம் வந்திருக்கிறார்கள். மகா விஷ்ணு மகா லட்சுமியுடன் வலம் வந்திருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. கார்த்திகை பவுர்ணமி அன்று கிரிவலம் வருவது மிகவும் சிறப்பிக்கப்படுகிறது. கார்த்திகையில் கிரிவலம் வரும்பொழுது மழை பெய்ய நேரிட்டால், அந்த மழையில் நனைந்தால் தேவர்களின் ஆசி கிட்டும்.

## விவசாயம் காப்போம்

# தேமோர், அரப்பு மோர், மீன் கரைசல் தயாரிக்கும் முறை

தேமோர் கரைசல்

தேவையான பொருட்கள்:-

புளித்த மோர் -5 லிட்டர்
தேங்காய்ப்பால் -1 லிட்டர்
தேங்காய் துருவல் -10 தேங்காய்
அழுகிய பழங்கள் -10 கிலோ

தயாரிப்பு முறை:-

புளித்த மோர் மற்றும் தேங்காய்ப்பால் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து ஒரு மண்பானை அல்லது பிளாஸ்டிக் கேனில் இட்டு, நிழலான இடத்தில் வைக்க வேண்டும்.

இவற்றுடன் 10 தேங்காய்களின் துருவல், அழுகிய பழங்கள் 10 கிலோ இவற்றை பொட்டலம் போல் கட்டி அதில் போட வேண்டும்.

தினமும் கரைசலைக் கலக்கி வரவேண்டும்.

ஏழு நாட்களில் தேமோர்க் கரைசல் தயாராகி விடும். 8-ம் நாள், ஒரு லிட்டர் தண்ணீரில் 50 மில்லி தேமோர்க் கரைசல் என்ற விகிதத்தில் கலந்து, காலை அல்லது மாலை நேரத்தில் செடிகளுக்குத் தெளிக்கலாம்.

நன்மைகள்:-

தேமோர்க் கரைசல் என்பது பயிர் வளர்ச்சி ஊக்கியாகப் பயன்படுகிறது.

பயிர்களில் பூ எடுக்கும் சமயத்தில் இக்கரைசலைத் தெளித்தால், பூக்கள் அதிகமாகப் பூக்கும்.

இக்கரைசல் தெளிக்கப்பட்டு விளைந்த காய்கறிகள் மிகவும் சுவையாக இருக்கும்.

அரப்பு மோர் கரைசல்

தேவையான பொருட்கள் :-

புளித்த மோர் -5 லிட்டர்
இளநீர் -1 லிட்டர்
அரப்பு இலைகள் -1 முதல் 2 கிலோ
500 கிராம் பழ கழிவுகள் அல்லது பழ கழிவுகளில் இருந்து எடுக்கப்பட்ட 1 லிட்டர் சாறு.

தயாரிக்கும் முறை:-

அரப்பு இலைகளை நீருடன் சேர்த்து நன்கு அரைக்க வேண்டும்.

பின்னர் இதனுடன் புளித்த மோர், இளநீர் மற்றும் பழச்சாறு ஆகியவற்றை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்தக் கரைசல் கலவையை மண்பானை அல்லது பிளாஸ்டிக் வாளியில் ஒருவார காலத்திற்கு வைத்திருக்க வேண்டும். இந்த ஒருவார காலத்தில் நொதிக்க தொடங்கி விடும். இந்த நொதித்த கரைசலே அரப்பு மோர் கரைசல் ஆகும்.

அரப்பு இலைத் தூள் பயன்படுத்துவதாக இருந்தால், பழ கலவைகளுக்கு பதிலாக பழ சாறு பயன்படுத்த வேண்டும். நான்கு பொருட்களையும் கலந்து அதனை ஏழு நாட்களுக்கு நொதிக்க விட வேண்டும்.

ஒரு லிட்டர் அரப்பு மோர் கரைசலுடன் 10 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும்.

நன்மைகள்:-

அரப்பு மோர் கரைசல் தெளிப்பதால் பூச்சிகள் தாக்குதல் இருக்காது.

இது தாவர வளர்ச்சிக்கு உதவுகிறது மற்றும் பூஞ்சை நோய்களுக்கு எதிர்ப்பு தன்மை உருவாகிறது.

அரப்பு மோர் கரைசலை பூப் பிடிக்கும் பருவத்தில் தெளிப்பதால் பயிர் வளர்ச்சி வேகமாக காணப்படும். நிறையப்பூக்கள் பூக்கும்.

அரப்பு மோர் கரைசலில் ஜிப்ரலிக் அமிலம் என்ற வளர்ச்சி ஊக்கி உள்ளதால் பயிர்கள் குறைந்த காலத்தில் நன்கு வளர்ச்சியடைந்து, அதிக விளைச்சல் மற்றும் மகசூல் கிடைக்கும்.

மீன் கரைசல்

தேவையான பொருட்கள்:-

மீன் கழிவுகள் -1 கிலோ
பனை வெல்லம் (அ) நாட்டு சர்க்கரை -1 கிலோ

தயாரிக்கும் முறை:-

உணவுக்கு பயன்படாத மீன் கழிவுகளுடன் சம அளவு பனை வெல்லம் சேர்த்து கலக்க வேண்டும்.

இதனை ஒரு பிளாஸ்டிக் வாளியில் அல்லது டப்பாவில் போட்டு காற்று புகாமல் மூடி வைக்க வேண்டும்.

நாற்பது நாட்கள் கழித்து தேன் போன்ற நிறத்தில் ஒரு திரவம் வாளிக்குள் இருக்கும். மீன் கழிவுகள் அடியிலேயே தங்கியிருக்கும். இந்த திரவத்திலிருந்து கெட்டை வாடை வீசாது. பழவாடை வீசும். இப்படி பழவாடை வீசினால் மீன் அமினோ அமிலம் தயார் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு தயார் செய்யப்படும் மீன் அமினோ அமிலத்தை 200 மில்லி எடுத்து 10 லிட்டர் தண்ணிரில் கலந்து பயிர்களின் மேல் தெளிக்கலாம்.

ஒரு முறை தயார் செய்யப்படும் மீன் அமினோ அமிலத்தை 6 மாத காலம் வரை வைத்திருந்து பயன்படுத்தலாம். தேவைப்படும் போது மீன் அமினோ அமிலத்தை எடுத்துக் கொண்டு பிளாஸ்டிக் வாளியை காற்று புகாமல் மூடி வைத்து பாதுகாக்க வேண்டியது அவசியம்.

பயன்கள்:-

மீன் அமினோ அமிலம் ஒரு முக்கிய வளர்ச்சி ஊக்கியாக செயல்படும் தன்மை கொண்டது.

துழைச்சத்துக்கு யூரியாவை பயன்படுத்துவதற்கு பதிலாக இந்த அமிலத்தை பயன்படுத்தலாம்.

# YOUNG ACHIEVER AWARD



This week MYSHA MISHRA received Young Achiever Award from our Express Velachery Team.

Mysha Mishra is a 7 year old girl studying Grade 2 in National Public School, Yeshwantpur ,Bangalore.


***Sky is not the limit as this champion believes in going beyond - Mysha Mishra multi talented girl from Bangalore is winning hearts world wide.*** She is a pride daughter of Mrs.Nidhi Mishra.




At the tender age of four, Mysha has won many prizes in various fields like academics, creativity, brain games, appeared in social medias, etc. With fire in her eyes and being patriot, she wants to achieve the best for her country.

Her inspiration is Elon Musk and wants to be a scientist performing in field of space. She is also animal lover and wants to work towards their betterment. She also done many media appearances like in TV ads, websites and you tube.







Her hobbies are dancing, singing and drawing. She has been praised for her rubik cube solving skills, mental math calculations, dancing, singing, fancy dress performances, story telling skills, etc.


Her first achievement was on 23rd Aug 2020, at age of four appearing in Delhi News 7 newspaper for her patriotic dance performance on song “It happens only in India” mesmerizing everyone with her cute steps.

She has become world record holder for “Fastest to solve 3*3 rubik cube while solving maximum mental math calculation ate age of 6 years. This was awarded by International Books of World Record on 23rd August 2022. She also appeared in Times of India Bangalore for this.

She received certificate and medal from Guinness Book of World record for participating in event of most people solving rotating puzzle cubes simultaneously online on 6h Feb 2022.

She received a gold medal and certificate for being the topper in Silver zone International Olympiad exam in Class 1.



She has also appeared in TV ads of Kissan Jam and Max T shirt. She has also made her media presence in website like Meesho and shop clues.

She has won many prizes in various fields like drawing, dancing, singing, mental maths, story telling, rubik cube solving, fancy dress etc. From various organisations like Enchanting kids India Big Talent, Wonder Buddies, Smart kids, Samaik trust, etc.

A big thanks to my teachers and Principle of National Public School, Yeshwantpur for helping me in molding to be a super kid.

Mysha motto is "Nothing is impossible” and she is keeping her spirit high in success.




***“ We are proud to present this award to this Little Cute Angel. May your life always shower you with such happy and successful moments... Congratulations!”***

# நன்றி மறந்த சிங்கம்

**திருக்குறள் கதை**

ஒருநாள் ஒரு மரம் வெட்டுறவர் காட்டுக்குள்ள மரம் வெட்டிக்கிட்டு இருந்தாரு ,அப்ப யாரோ கத்துற மாதிரி சத்தம் கேட்டுச்சு

உடனே சத்தம் கேட்ட பக்கம் போய் பாத்தாரு அந்த விறகுவெட்டி.அங்க ஒரு சிங்கம் கூண்டுக்குள்ள அடைஞ்சு கிடைச்சது ,அத பாத்ததும் தெரிஞ்சது எதோ வேட்டைக்காரன் கூண்டு வச்சு அந்த சிங்கத்தை பிடிச்சிட்டான்னு



விறகுவெட்டிய பாத்ததும் மனிதனே என்னை காப்பாத்துன்னு சொல்லி கத்துச்சு அந்த அந்த சிங்கம் ,இருந்தாலும் தயக்கமா இருந்த அந்த விறகுவெட்டி சிங்கமே நீ வேட்டையாடி சாப்புடுற மிருகம் உன்ன வெளிய விட்டா நீ என்ன கொன்னு தின்னுடுவான்னு சொன்னாரு

மனிதனே நானே கூண்டுக்குள்ள அடிபட்டு கிடைக்குறேன் என்னால உனக்கும் எந்த ஆபத்தும் வராது கூண்ட தொறந்து விடுன்னு கெஞ்சி கேட்டுக்கிடுச்சு

பயந்துபோன விறகுவெட்டி நன்றி கெட்ட சிங்கமே இது என்ன உன்ன காப்பாத்துன என்னையே கொள்ள வரேன்னு கத்துனாரு

அப்ப அந்த சிங்கம் சொல்லுச்சு என்னோட குணம் உனக்கு தெரியாத ,நான் ஒரு வேட்டை மிருகம்னு தெரிஞ்சும் என்ன விடுவிச்ச உனக்கு என்ன நடந்தாலும் அதுக்கு நான் பொறுப்பில்லன்னு சொல்லி அவரு மேல குதிக்க ஆரம்பிச்சது



சிங்கத்த நம்புனது ரொம்ப தப்புனு நினச்சு வருத்தப்பட்ட மனுஷன் அந்த சிங்கத்துக்கு உணவா ஆகுறது தனக்கு கிடைச்ச தண்டனைனு நினச்சுகிட்டு இருக்கும்போது அங்க ஒரு நரி வந்துச்சு.



நரியாரே நரியாரே என்ன காப்பாத்துங்கன்னு சொல்லுச்சு ,நடந்தத தெரிஞ்சுக்கிட்ட நரி அந்த மனுசன காப்பாத்த நினைச்சது

அது எப்படி சிங்கத்த நீ காப்பாத்துனனு கேட்டுச்சு ,உடனே சிங்கம் சொல்லுச்சு நான் இந்த கூண்டுக்குள்ள இருந்தப்பனு கதைய செல்ல ஆரம்பிச்சது

இருங்க இருங்க சிங்கராஜாவே அது எப்படி நீங்க கூண்டுக்குள்ள மாட்டுனீங்க ,இந்த மனுஷன் எந்த பக்கம் இருந்து வந்தான் ,எப்படி இவனால கூண்ட தொறக்க முடிஞ்சதுன்னு கேள்வி கேட்டுகிட்டே இருந்துச்சு

அப்ப சிங்கம் நடந்தத நடிச்சு காமிக்க ஆரம்பிச்சது,அப்ப சொல்லுச்சு நான் இந்த கூண்டுக்குள்ள இருந்தானான்னு சொல்லிகிட்டே கூண்டுக்குள்ள போச்சு சிங்கம் ,இதுதான் சமயம்னு டக்குனு கூண்ட மூடிடுச்சு நரி

இது என்ன தீர்ப்பு சொல்ல வந்த நீ இப்படி பண்ணலாம்னு கேட்டது , வேட்டையாடுற உன்னோட குணத்த எப்படி உன்னால மாத்திக்க முடியாதோ ,அதுமாதிரி அடுத்தவங்களை ஏமாத்துற பழக்கத்த என்னால விட முடியாதுன்னு சொல்லி அந்த மனுசன காப்பாத்துச்சு அந்த நரி

அப்பத்தான் அந்த சிங்கத்துக்கு ஒரு குறள் ஞாபகத்துக்கு வந்துச்சு



**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**



தனக்கு நன்மை செய்ய வந்த மனுசன கொள்ள நினைச்சது தன்னோட தன்னோட நன்றி இல்லாத தனம் அதனால தனக்கு கிடைச்ச தண்டனை சரிதான்னு நினைச்சது

## GNC National Service Scheme - Mega Blood Donation Camp



The National Service Scheme of Guru Nanak College organized a MEGA Blood Donation Camp on 10-11-2022 at Guru Teg Bahadur Auditorium. This Camp was coordinated by the NSS Programme officers Dr.P.Nedumaran, Dr.S.Athilinga Senjith, Dr.A.Amala Lourthuraj, and Dr.K.Muthupandi. **Dr.Vaneeta Aggarwal, NSS Coordinator, University of Madras and Dr. M.G.Ragunathan Principal, Guru Nanak College** were inaugurated the Camp and encouraged the students to donate blood. Students of Guru Nanak College donated blood to Rajiv Gandhi Government Hospital (435 Units), Kilpauk Medical College (151 Units), Government Kasturba Gandhi Hospital for Women and Children (100 Units), Royapettah Government Hospital (196 Units), Adyar Cancer Institute (127 Units) respectively. Totally 1009 Units of Blood donated by our Students during this camp. Every year Guru Nanak College sets a benchmark by donating high units of blood, regarding this we have Received Awards for the past couple years.



# இந்த வார ராசிபலன்



**மேஷம்**

இந்த வாரம் குடும்பத்தில் சில புதிய அல்லது சிறிய விருந்தினர் வருவதற்கான வாய்ப்பு உள்ளது, இது குடும்ப சூழலில் மகிழ்ச்சியைத் தரும்.



**துலாம்**

இந்த வாரம் உங்கள் குடும்பத்தினரும் நண்பர்களும் உங்களுடன் தூணாக நிற்பதைக் காணும் போது இதுபோன்ற பல சூழ்நிலைகள் உங்கள் முன் தோன்றும்.



**ரிஷபம்**

இந்த வாரம் தங்கள் மனைவிக்காக பணத்தை செலவழிப்பதைக் காணலாம். நீங்கள் அவர்களுடன் ஒரு அழகான பயணத்தைத் திட்டமிடலாம்.



**விருச்சிகம்**

இந்த வாரம் உங்கள் குடும்பத்தில் அமைதியைப் பேண உதவும். பணம் தொடர்பான சில சிக்கல்கள் இருந்தால், அவை முற்றிலும் அகற்றப்படலாம்.



**மிதுனம்**

இந்த வாரம் மனம் மகிழ்ச்சியாக இருக்கும். குடும்ப உறுப்பினர்களும் புதிய பொருட்களை வாங்குவதன் மூலம் உங்களுடன் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.



**தனுசு**

இந்த வாரம் உங்கள் குழந்தையின் கல்விக்காக நிறைய பணம் செலவழிக்க வேண்டியிருக்கும். நீங்கள் எதிர்பார்த்ததை விட நிதி நெருக்கடிகளை சந்திக்க நேரிடும்.



**கடகம்**

இந்த வாரம் குடும்ப வாழ்க்கையில் அனைத்து பிரச்சனைகளையும் சமாளிக்க முடியும். குடும்ப உறுப்பினர்களிடம் சகோதரத்துவம் பெருகும் .



**மகரம்**

இந்த வாரம் பல வணிகர்கள் ஒரு நல்ல முதலீடு செய்ய நண்பரின் உதவியுடன் முடிவு செய்யலாம்.முதலீடு பற்றிய ஒவ்வொரு விஷயத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும்.



**சிம்மம்**

இந்த வாரம் நீங்கள் நிதி வாழ்க்கையில் அதிர்ஷ்டத்தின் ஆதரவைப் பெறுவீர்கள், ஆனால் இந்த நேரத்தில் நீங்கள் ஏதேனும் முதலீடு செய்யுங்கள்.



**கும்பம்**

இந்த வாரம் நீங்கள் வீட்டில் உள்ள குழந்தைகளுடன் உங்கள் நேரத்தை செலவிட வேண்டும். இதைச் செய்வதன் மூலம் உறவை மேம்படுத்த முடியும்.



**கன்னி**

இந்த வாரம் உங்கள் குடும்ப உறுப்பினர்களும் உங்களுடன் மகிழ்ச்சியாக இருப்பார்கள், மேலும் நீங்கள் சிறப்பாகச் இருகக் ஊக்குவிக்கப்படுவீர்கள்.



**மீனம்**

இந்த வாரம் உங்கள் துறையில் நீங்கள் சிறப்பாக செயல்படுவதற்கு உங்கள் குடும்பத்தின் ஆதரவே முக்கிய காரணம் என்று நீங்கள் உணருவீர்கள்.

## COOL FACTS ABOUT ANIMALS

- Giant Pandas eat approximately 28 pounds of bamboo a day – that's over 5 tons per year!
- Some fish cough. Really.
- Cats are not able to taste anything that is sweet.
- Snails take the longest naps with some lasting as long as three years.
- American Black bears are not just black but include bears of varying colors including blonde, cinnamon, brown, white and even silver-blue.
- A horse's canter is a 3-beat gait. On the second beat, opposite front and rear legs hit the ground at the same time. After the third beat is a "rest", or suspension, when all three legs are off the ground.
- Kangaroos can not walk backwards.
- Sea Lions have rhythm. They are the only animal able to clap to a beat.
- Baby koalas are fed poo by their parents after they are born which helps them digest Eucalyptus leaves later in life.
- Hippopotamus milk is pink.
- Don't like mosquitoes? Get a bat. They could eat 3,000 insects a night.
- Birds can not live in space – they need gravity to be able to swallow.
- Goats have rectangular pupils in their eyes.
- Many mammals, including cats and dogs, walk on their toes in contrast to humans, who walk on the soles of their feet.
- If a Donkey and a Zebra have a baby, it is called a Zonkey.
- Cows can walk up stairs but not down them.
- Tiger shark embryos begin attacking each other in their mother's womb before they are even born.
- A giraffe has seven bones in its neck, which is the same as a human has, but they are much larger.
- The pattern of wrinkles on a gorilla's nose is unique to each one and is known as a 'nose print'. Conservation workers use photos and sketches of gorillas' noses to keep track of individuals.
- A chameleon's tongue is at least as long as its body, but it can grab prey in a fraction of a second.

## பல் ஈறு நோய் போக்கும் இயற்கை மருத்துவம்

எலுமிச்சம் பழச்சாறு அரை பாகம், தக்காளிப் பழச்சாறு ஒரு பாகம். சுத்தமான தேன் கால் பாகம் கலந்து காலை மாலை உண்டு வந்தால் கல்லீரல் பாதுகாக்கப்பட்டு, ரத்த ஓட்டம் சீராகவும், பலம் பெறவும் உதவும். நல்ல காபிப்பொடியில் தயாரிக்கப்பட்ட காபியில் குடிக்கும் பதத்தில் ஒரு எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு உடனே சாப்பிட்டு விடவேண்டும். இவ்வாறு மூன்று தினங்கள் செய்தால் தீராத தலை வலி நீங்கும். பல் ஈறுகளில் ஏற்படும் பல் வலிக்கும் ஈறுகளில் ஏற்படும் வலிகளுக்கும், பயோரியாவுக்கும் எலுமிச்சம் பழச்சாற்றை உள்ளுக்கு சாப்பிட்டும், பல், ஈறுகளில் படும்படி தேய்த்தும் வந்தால் மேற்கண்ட நோய்கள் தீரும்.

எலுமிச்சம் பழச்சாற்றில் சீனி கலந்து தினம் சாப்பிட்டால் வாந்தி நிற்கும். வயிற்றுக்கடுப்பு உள்ளவர்கள் சுத்தமான தண்ணீர் சமஅளவு கலந்து 60 மில்லியளவில் நான்கு மணிக்கு ஒரு முறை சாப்பிட்டால் வயிற்றுக் கடுப்பு உடனே நீங்கும். எலுமிச்சம்பழச் சாறு 1 லிட்டருக்கு 1.5 கிலோ சீனி சேர்த்து சர்பத் தயாரித்து தினமும் 15 மில்லிக்குக் குறையாமல் சாப்பிட்டால் உடல் களைப்பு நீங்கும், உடல் சுறுசுறுப்பாக இருக்கும்.

[375] **திருக்குறள்**



**நல்லவை எல்லாஅம் தீயவாம் தீயவும்**
**நல்லவாம் செல்வம் செயற்கு.**

In making wealth fate changes mood
The good as bad and bad as good.


**பொன்மொழி:-**

**உன் மீது உனக்கே நம்பிக்கை இல்லை என்றால்.. கடவுளே நேரில் வந்தாலும் பயனில்லை..**

**- சுவாமி விவேகானந்தர்**

# YOGASANAM

## PURVOTTANASANA



**STEPS:-**

- First get into the Staff pose (Dandasana).
- Keep your hands behind your hips, in a way that your fingertips are facing towards to your feet.
- Now bend your knees, keep your feet on the floor. Your feet should be hip-width apart.
- Breathe out and push your hands and feet strongly on the ground to lift your hips in such a way that they are parallel as your shoulders. Keep your arms straightened out.
- Include your spinal muscles as you rectify (straighten) your legs and point your toes in outward direction. Raise your hips as high as possible, and keep your gluts firm and also keep your legs strong.
- Now raise your mid-section (chest) up and permit your shoulders to roll onto your back. Give your head a chance to hang behind you, yet be wary of your neck.
- Remain in the pose about 5 to 6 breaths, after that breathe out and lower down your body and get into the initial pose.

Repeat this process around 3 to 5 times.

**BENEFITS:-**

- It stretches the chest, shoulders, biceps and the front of your ankles.
- It strengthens your arms, legs, core and back.
- It is an excellent counterpose for four- limbed staff pose.
- It strengthens your arms, wrists, hamstrings and glutes.
- Good therapeutics for depression or fatigue and relaxes your mind.




அருட்பெருஞ்ஜோதி தனிபெருங்கருணை
**YOGA CENTRE**
**Cell : 9444 122 922**



# Entertainment Corner

## அறுசுவை சமையல்

## முட்டை கீமா

**தேவையான பொருட்கள்:**

- 6 முட்டை
- 2 பெரிய வெங்காயம்
- 3 தக்காளி
- 1 கப் பச்சை பட்டாணி
- 1 பச்சை மிளகாய்
- 3 பூண்டு பல்
- 1 துண்டு இஞ்சி
- 1/2 மேஜைக்கரண்டி சீரகம்
- 1 மேஜைக்கரண்டி கரம் மசாலா
- 2 மேஜைக்கரண்டி மிளகாய் தூள்
- 2 மேஜைக்கரண்டி மல்லி தூள்
- 1/4 மேஜைக்கரண்டி மஞ்சள் தூள்
- 1 பிரியாணி இலை
- 1 நட்சத்திர பூ
- 2 ஏலக்காய்
- 2 கிராம்பு
- 1 துண்டு பட்டை
- சிறிதளவு கருவேப்பிலை
- சிறிதளவு கொத்தமல்லி
- தேவையான அளவு உப்பு
- தேவையான அளவு எண்ணெய்

**செய்முறை:**

- முதலில் வெங்காயம், பச்சை மிளகாய், தக்காளி, மற்றும் பச்சை பட்டாணியை தயார் செய்து, இஞ்சி பூண்டை பேஸ்ட் ஆக்கி வைத்துக் கொள்ளவும்.
- இப்பொழுது ஒரு பாத்திரத்தை மிதமான சூட்டில் அடுப்பில் வைத்து அதில் முட்டையை வேக வைப்பதற்கு தேவையான அளவு தண்ணீர் ஊற்றி அதில் 6 முட்டைகளை போட்டு சுமார் 10 நிமிடம் வரை அதை வேக விட்டு எடுத்து கூடை உரித்து வைத்துக் கொள்ளவும்.
- பின்னர் இந்த முட்டைகளை கேரட் துருவியின் மூலம் துருவி எடுத்து வைத்துக் கொள்ளவும்.
- பின்பு நாம் நறுக்கி வைத்திருக்கும் தக்காளியை மிக்சி ஜாரில் போட்டு அதை நன்கு பேஸ்ட்டாக அரைத்து ஒரு கிண்ணத்தில் ஊற்றி வைக்கவும்.
- அடுத்து ஒரு கடாயை மிதமான சூட்டில் அடுப்பில் வைத்து அதில் 2 மேஜைக்கரண்டி அளவு எண்ணெய் ஊற்றி எண்ணெய்யை சுட வைக்கவும்.
- எண்ணெய் சுட்ட பின் அதில் நட்சத்திர பூ, ஏலக்காய், கிராம்பு, பட்டை, பிரியாணி இலை, மற்றும் சீரகத்தை போட்டு வறுக்கவும்.
- அது வறுபட்டதும் அதில் நாம் நறுக்கி வைத்திருக்கும் வெங்காயம், பச்சை பட்டாணி, கருவேப்பிலை, மற்றும் ஒரு சிட்டிகை உப்பு சேர்த்து வெங்காயம் கண்ணாடி பதம் வரும் வரை வதக்கவும்.
- வெங்காயம் கண்ணாடி பதம் வந்ததும் அதில் நறுக்கி வைத்திருக்கும் பச்சை மிளகாய், கரம் மசாலா, மிளகாய் தூள், மல்லி தூள், மஞ்சள் தூள், மற்றும் ஒரு மேஜைக்கரண்டி இஞ்சி பூண்டு பேஸ்டை சேர்த்து நன்கு கிளறி விட்டு இஞ்சி பூண்டு பேஸ்டின் பச்சை வாசம் போகும் வரை அதை வதக்கவும்.
- இஞ்சி பூண்டு பேஸ்டின் பச்சை வாசம் போனதும் அதில் நாம் அரைத்து வைத்திருக்கும் தக்காளி பேஸ்ட்டை சேர்த்து நன்கு கிளறி விடவும்.
- அடுத்து இதில் அரை டம்ளர் அளவு தண்ணீர் விட்டு அதனுடன் தேவையான அளவு உப்பு சேர்த்து நன்கு கலந்து விட்டு அதை சுமார் 4 லிருந்து 5 நிமிடம் வரை வேக விடவும். (முட்டை கீமா நன்கு கிரேவியாக வேண்டும் என்றால் அதற்கேற்றவாறு தண்ணீர் சேர்த்து கொள்ளவும்.)
- 4 நிமிடத்திற்கு பிறகு அதில் நாம் துருவி வைத்திருக்கும் முட்டைகளை சேர்த்து பக்குவமாக கிளறி விட்டு இறக்குவதற்கு முன் சிறிதளவு கொத்தமல்லியை அதன் மேலே தூவி ஒரு கிளறு கிளறி இறக்கவும்.
- இப்பொழுது உங்கள் சூடான மற்றும் சுவையான முட்டை கீமா தயார். இதை கட்டாயம் உங்கள் வீட்டில் செய்து பார்த்து உங்கள் குடும்பத்தாருடன் சேர்ந்து சுவைத்து மகிழுங்கள்.

## சுடோக்கு விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 8 | 4 | 7 | 9 | 6 | 1 | 2 | 3 |
| 3 | 6 | 1 | 4 | 5 | 2 | 7 | 8 | 6 |
| 2 | 9 | 7 | 3 | 8 | 1 | 6 | 5 | 4 |
| 8 | 1 | 2 | 5 | 4 | 9 | 3 | 6 | 7 |
| 4 | 7 | 9 | 2 | 6 | 3 | 8 | 1 | 5 |
| 6 | 5 | 3 | 1 | 7 | 8 | 9 | 4 | 2 |
| 1 | 4 | 5 | 6 | 3 | 7 | 2 | 9 | 8 |
| 7 | 2 | 8 | 9 | 1 | 4 | 5 | 3 | 6 |
| 9 | 3 | 6 | 8 | 2 | 5 | 4 | 7 | 1 |

Publisher : R. Rajesh
Editor : Saranya Rajesh
Designer : D. Deepa
Journalist : P. Praveen
Marketing Executive : C. Karthikeyan

இது எங்களுடைய ஒரே பத்திரிக்கை நிறுவனம்
This is our only concern

Express Velachery
*Weekly - News Paper*
37F, Diya Complex
Velachery Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600042.
*Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm*
*Saturday 9.30 am to 12.30 pm*
**044-42077328 / 7305837388**
E-mail : expressvelachery@gmail.com

**DISCLAIMER**

Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.

## தமிழோடு! விளையாடு!

கட்டத்தில் உள்ள எழுத்துக்களில் 10 பூக்களின் பெயர்கள் கண்டுபிடியுங்கள்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | இ | ட | தா | ர் | பூ | ம | ல் | லி | வ் |
| த் | ய் | ச | ங் | க | த | லி | ங் | லா | ஜ |
| பே | ர | ம் | மா | ணி | ஓ | யு | ர | ச | க |
| ர | ப் | ப | து | தா | சா | லை | சி | அ | ன |
| ர | பா | ங் | ளை | ஏ | ம | ச் | செ | ல | கா |
| ளி | கி | கி | ழ | ஈ | இ | ரை | ம் | ரி | ம் |
| சி | க | ப் | பு | சோ | ள | ம் | ப | ப | ப |
| உ | ப் | ரோ | ஜா | ங் | கு | பு | ரு | செ | ர |
| ப | க் | நெ | ய் | த | ல் | கு | த | ர் | ம் |
| த | ர் | பூ | ச | ணி | ச | ப | தி | ரி | ஊ |

## சுடோக்கு விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | | | | | | |
| | | | 5 | 9 | | 7 | | 3 |
| | 7 | | | 1 | 2 | | 4 | |
| | 9 | 2 | 6 | | | | | |
| | | | 2 | 8 | | | | |
| | | | | | 4 | | 3 | 9 |
| | | 5 | 7 | | | | | |
| | 4 | | | 5 | 1 | | 8 | |
| | | | | | | | | 4 |

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

## விடுகதை விளையாட்டு

1.என்னிடம் இறகுகள் உண்டு ஆனால் நானாக பறக்க முடியாது நான் யார்?

2.உணவு கொடுத்தால் சாப்பிடும் தண்ணீர் கொடுத்தால் இறந்துவிடும் அது என்ன?

3.நான் ஒரு பாறை ஆனால் நீரில் போட்டால் கரைந்து விடுவேன் நான் யார்?

4.தேர் ஓடுது பூ உதிருது அது என்ன?

5.கோடையில் வெப்பத்தை தடுப்பேன், குளிர்காலத்தில் குளிர்ந்த காற்றை தடுப்பேன் நான் யார்?

6.அஸ்திவாரம் இல்லாமல் அரண்மனை கட்டினேன் அது என்ன?

7.கொஞ்சம் தண்ணீர் கொண்ட பழம், சமையலுக்கு பாலும், எண்ணெய்யும் தரும் பழம், சற்று உயரத்தில் இருக்கும் பழம் அது என்ன ?

8.பார்த்தால் பார்க்கும், சிரித்தால் சிரிக்கும், குத்திப் பார்த்தல் பத்து சில்லாம் அது என்ன?

9.நீ உறங்கும் போது விழித்திருப்பவன் நான். ஆனால் நீங்கள் விழித்திருக்கும் போது நான் ஓய்வெடுப்பேன் நான் யார்?

10.மொட்டை தட்டிலே எட்டுப்பேர் பயணம் அது என்ன?

### சென்ற வார விடுகதை விளையாட்டு விடைகள்

1.செருப்பு 2.மஞ்சள் கிழங்கு 3.தேன்
4.சிலந்தி 5.பட்டாசு 6.மூச்சு
7.பூரி 8.வெண்டைக்காய்

### சென்ற வார குறுக்கெழுத்துப் புதிர் விடைகள்

இடமிருந்து வலம்:-
1.நாழிகை
2.தீண்டாமை
6.கனவுகன்னி
10.பன்னிருவர்
11.அடையாறு ஆலமரம்
13.திண்ணை
14.மது
16.பிரம்மபுத்திரா
17.நீர்

மேலிருந்து கீழ்:-
2.தீரன்சின்னமலை
3.இணையம்
4.ஈவு
6.பகைவர்
7.துருவம்
8.வினையாலணையும்
11.அமைதி
12.அமைச்சர்
14.மரபு
15.மதுரா

TNBIL04133 R.Dis.No.1845/2014


# CHUTTIES CORNER

## தனித்திறமை பகுதி






**Joshua Daniel**
Class 5
St. Theresa Bacq
Public School,
Bangalore.





**Yeddanapudi Jeyan**
Class 5
Delhi Public School,
Nacharam,
Telangana.

## படத்தில் உள்ள 15 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்...!



## PAPER CRAFT



## MEHANDI DESIGNS



உங்கள் வீட்டு குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்த, அவர்களின் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை அவர்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

## What does it mean?




- **Come what may**: whatever may happen
  My mother taught me to tell the truth, **come what may**.

- **Cop it**: to be punished
  You will **cop it** if your father finds out you broke the window.

- **Round the corner**: very near; soon to happen
  There's a great restaurant just **round the corner**.



Dr.Mrs. Y. Deepika,
M.Sc.,Ph.D.,
Delhi Public School,
Nacharam,Telangana,
India.







Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, No.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH